பத்திரிக்கை செய்தி

சென்னை மின்சார வாரிய பகிர்மானம் போரூர் அலுவலகத்தில் பொதுமக்களிடமிருந்து நிறைய லஞ்ச பணம் பெறுவதாக துணை கண்காணிப்பாளர் சென்னை நகரப் பிரிவு -1 தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் இன்று 18.09.2025ஆம் தேதி மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அவர்களின் மேற்பார்வையில் சென்னை நகரப் பிரிவு-1 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் ஆய்வாளர்கள் மற்றும் ஆளிநர்களுடன் உடன் சேர்ந்து மாலை 16.30 மணிக்கு நடத்திய திடீர் கூட்டு தணிக்கையின் போது போரூர் மின் பகிர்மானம் உதவி பொறியாளர் அலுவலகம் போரூர்-2 ஊரகம் அலுவலகத்தில் உதவி பொறியாளர் அவர்களின் அலுவலகத்தை சோதனை செய்தபோது அலுவலகத்தில் ஆஜரில் இருந்த திருமதி தாமரை செல்வி உதவி பொறியாளர் அவர்களின் அலுவலக அறையிலும் மற்றும் அவருடைய உடமைகளையும் சோதனை செய்தபோது அவர் தன்னுடைய கைப்பை காரில் இருப்பதை தெரிவித்தார் அதனைத் தொடர்ந்து அவருடைய காரை சோதனை செய்ததில் அதில் அவர் வைத்திருந்த கைப்பையில் ரூபாய் ஒரு லட்சம் இருந்ததை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் கைப்பற்றினார் அதைக் குறித்து விசாரித்த போது அவர் சரியான விளக்கம் அளிக்காததால் சந்தேகத்தின் பேரில் அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் அவர்களால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது மேலும் அலுவலகத்தில் இருந்த மற்ற போர் மேன் திரு.ராஜ் மற்றும் மோகனரங்கன் ஃபோர் மேன் ஆகியவர்களிடமிருந்தும் கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றப்பட்டது இந்த திடீர் கூட்டு தணிக்கையில் போரூர் மின் பகிர்மான அலுவலகத்தில் உதவி பொறியாளர் மற்றும் போர்மேன் ஆகியோர்களிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூபாய் 1,29,300/- கணக்கில் வராத பணத்தை குறித்து விசாரிக்க மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் துணை கண்காணிப்பாளர் சென்னை அவர்களிடம் புகார் அளிக்கப்பட்டது புகாரைப் பெற்று விசாரணையில் இருந்து வருகிறது.